பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 07 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக பாரம்பரிய குழுவின் கூட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கிவைக்கிறார்.

2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது. முதல் நாளில் பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சமர்ப்பிக்கிறார்.

3. கேரளாவில் நிபா வைரஸ் பரவலை தடுக்க மாநில அரசு பொது சுகாதார நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

4. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் வெப்பநீரால் கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று வளாக இயக்குனர் திரு ஜாய் வர்கீஸ் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 78 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

---இனி விரிவான செய்திகள்----

<<<<<<>>>>>

உலக பாரம்பரிய குழுவின் கூட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்னும் சற்றுநேரத்தில் புதுதில்லி பாரத் மண்டபத்தில் தொடங்கிவைக்கிறார்.

யுனஸ்கோவின் பாரம்பரிய குழுவின் கூட்டம் முதல் முறையாக இந்தியாவில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இம்மாத இறுதிவரை நடைபெறும் இக்கூட்டத்தில், பாரம்பரிய சின்னங்களின் பாதுகாப்பு, அதற்கான செலவுகளை சர்வதேச பாரம்பரிய நிதியத்தில் இருந்து வழங்குவது, புதிய இடங்களை தேர்வு செய்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் அனைத்து பிரச்சினைகள் குறித்தும் திறந்த மனதுடன் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரையொட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்குபின், செய்தியாளர்களிடம் பேசிய

அவர், நாடாளுமன்ற நடவடிக்கைகளை சுமூகமாக நடத்தி செல்வதில் அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் பொறுப்பு உண்டு என்று குறிப்பிட்டார்.

இரு அவைகளிலும் உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்துக்கட்சியினரும் இந்த கூட்டத்தொடரை சுமூகமாக நடத்தி செல்ல ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில், மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு கிரண் ரிஜிஜு, திரு அர்ஜுன் ராம் மெக்வால், திரு ஜெ பி நட்டா, திரு சிராக் பாஸ்வான், திரு ராம்தாஸ் அத்வாலே ஆகியோரும், காங்கிரஸ் தலைவர்கள் திரு ஜெய்ராம் ரமேஷ், திரு கௌரவ் கோகோய், தேசியவாத காங்கிரஸ் கட்சி சார்பில் திரு பிரஃபுல் பட்டேல், திமுக சார்பில் திரு டி ஆர் பாலு, திரு திருச்சி சிவா, ஆம் ஆத்மி கட்சி சார்பில் திரு சஞ்சய் சிங், **AIMIM** கட்சியின் திரு அசாதுதின் ஒவைசி உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

நாளை தொடங்கும் பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளன்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பொருளாதார ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார்.

நாட்டின் பல்வேறு துறைகளின் வளர்ச்சி, ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, பணவீக்கத்தின் தாக்கம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட முக்கிய தகவல்கள் இதில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுநாள் நிதியமைச்சர் மக்களவையில் 2024-25-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பதவியேற்றபின்னர் தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

கேரளாவில் நிபா வைரஸ் பரவலை தடுக்க மாநில அரசு உறுதியான பொது சுகாதார நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

மலப்புரம் மாவட்டத்தில் இன்று நிபா வைரஸால் பாதிக்கப்பட்ட 14 வயது சிறுவன் உயிரிழந்தார்.

மத்திய சுகாதார அமைச்சகத்தை சேர்ந்த குழு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று தேவையான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பழம் திண்ணி வவ்வால்கள் மூலம் நிபா வைரஸ் பரவுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வவ்வால்கள் மூலம், பழங்களுக்குள் வைரஸ் கிருமி தொற்று செல்வதாகவும், இதனை உண்பவர்களுக்கு நோய் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

நோயால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தி, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா நான்காவது இடத்தை பெற்றுள்ளதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நான்கு தங்கம் மற்றும் ஒரு வெள்ளி பதக்கத்துடன் நான்காவது இடத்தை பெற்றுள்ள இந்த சாதனை இளைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் என்றும்,

கணிதத்தை பயில்வதற்கான உற்சாகத்தை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்த வெளியேற்றப்படும் வெப்பநீரால் கடல் உயிரினங்களுக்கோ, மீன்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அந்த அணுமின் நிலைய வளாக இயக்குனர் திரு ஜாய் வர்கீஸ் கூறியுள்ளார்.

நெல்லையில் நடைபெற்ற அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில், நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில் பொறியியல் கல்லூரிகளில் பயின்ற 612 மாணவர்களுக்கு அவர் பட்டங்களை வழங்கினார்.

அப்போது பேசிய அவர், அணுமின் நிலையங்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்போது மிக குறைவான எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது என்றும், எரிபொருள் கழிவுகளை வெளியேற்றுவதற்கு மிக சிறப்பான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

கூடங்குளம் அணுமின் நிலையம் மிகவும் பாதுகாப்பானது என்றும் அவர் கூறினார்.

அணு உலையில் வெப்பம் ஏற்படாமல் தடுப்பதற்காக இயற்கை முறையில் அணு உலைகளை குளிரூட்டும் அமைப்பு கூடங்குளத்தில் அமைந்துள்ளதாகவும், அங்கிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

சுனாமி போன்ற பெரிய தாக்கம் ஏற்பட்டாலும், இந்த அணுஉலையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று திரு ஜாய் வர்கீஸ் கூறினார்.

<<<<<<>>>>>

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக நடைபெற்றுவரும் மாணவர்கள் போராட்டத்தால் அங்கு சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

இந்நிலையில், அங்கு பயிலும் 373 இந்திய மாணவர்கள் மற்றும் நேபாளத்தை சேர்ந்த மூன்று மாணவர்கள், திரிபுராவில் உள்ள இரண்டு முக்கிய சோதனைச் சாவடிகள் வழியாக இந்தியா வந்துள்ளனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த அம்மாநில காவல்துறை தலைவர் திரு பட்டேல் பியூஸ் புர்ஷோத்தம் இன்று மேலும் 300 மாணவர்கள் இந்தியா வரவுள்ளதாக தெரிவித்தார்.

பங்களாதேஷில் இந்தியாவை சேர்ந்த மாணவர்கள் மருத்துவக்கல்வி பயில்வதற்காக அங்கு சென்றதாகவும், மாணவர்கள் வருகையை பயன்படுத்தி ஊடுருவக்காரர்கள் நுழையாமல் தடுப்பதற்கு இந்தியா – பங்களாதேஷ் எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

856 கிலோமீட்டர் நீளம் கொண்ட பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் 95 சதவீதம் முள்வேலியால் அடைக்கப்பட்டிருப்பதாகவும், எஞ்சியுள்ள 27 புள்ளி ஐந்து கிலோமீட்டர் எல்லைப்பகுதியை முள்வேலியால் அடைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது என்றும் திரு புர்ஷோத்தம் கூறினார்.

<<<<<<>>>>>

கர்நாடகத்தின் உட்பகுதிகள், கேரளா, மாஹே, கரையோர ஆந்திரப்பிரதேசம், ஏனாம், தெலங்கானா உள்ளிட்ட பகுதிகளில் இன்று முதல் ஐந்து நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் மிதமான மழை

பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் வரும் 27-ஆம் தேதிவரை ஓரிரு இடங்களில் மிதமான மழை தொடர்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல், வரும் ஐந்து நாட்களுக்கு மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டியுள்ள தென்தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 கிலோமீட்டர் வேகத்திலும் அவ்வப்போது 55 கிலோமீட்டர் வேகத்திலும் சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், காவிரி நீர்பிடிப்புப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, கர்நாடகாவில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இதனையடுத்து, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று மாலை நான்கு மணி நிலவரப்படி 57 ஆயிரத்து 409 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 70 புள்ளி எட்டு பூஜ்யம் அடியாக உள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 78 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இலங்கையின் **Dambulla-**வில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா 5 விக்கெட் இழப்பிற்கு 201 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஹர்மன்பிரீத் கவுர் 66 ரன் எடுத்ததார்.

ரிச்சா கோஷ் 64 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 123 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

-------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அமெரிக்காவின் **Hoston**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியா 2-0 என்ற ஆட்டக்கணக்கில் கனடாவை வென்றது.

காலிறுதியில் இந்தியா - கொரியாவை எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவு லீக் சுற்றின் மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்றதன் மூலம் இந்தியா காலிறுதிக்கு தகுதி பெற்றது.

-------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் உத்தம் ரானா வெண்கலப்பதக்கம் வென்றார்.

-------------

<<<<<<END>>>>>